**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.87/2022** **நாள். 18.02.2026**

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 வளர்மதி க/பெ. சக்திவேல்**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும். ஆங்கிலம் எழுத, படிக்க தெரியாது. எனது பிராதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி கருப்பண்ணன் எனது அப்பா. 2ம் பிரதிவாதி மோகன் எனது அண்ணன். தாவா சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சர்வே எண் சொத்துக்கள் அனைத்தும் ஒரே இடத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் அனைத்தும் விவசாய நிலங்கள் ஆகும். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தின் மொத்த பரப்பளவு என்னவென்றால் எனக்கு தெரியாது.

2) எனது அம்மா தற்போது உயிருடன் உள்ளார். நான் புதுப்பாளையத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்துக்கள் பரமத்தி கிராமத்தில் உள்ளது. நான் குடியிருக்கும் புதுப்பாளையத்திற்கும், தாவா சொத்து உள்ள பரமத்திக்கும் சுமார் 15 கி.மீ தொலைவு இருக்கும். திருமணத்திற்கு பிறகு, புதுப்பாளையத்தில் தொடர்ந்து குடியிருந்து வருகிறேன். எனது அப்பா, அம்மா தனி வீட்டிலும், எனது அண்ணன் மோகன் தனி வீட்டிலும் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை, 3 பேரும் ஒரே வீட்டில்தான் குடியிருந்து வருகிறார்கள். மேற்படி வீடானது ஓட்டு வீடாகும். வீட்டின் கதவு எண், மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் ஞாபகம்

இல்லை. மேற்படி ஓட்டு வீடானது, தாவா சொத்துக்களில் உள்ளது என்றால் சரிதான்.

3) என்னிடம் காண்பிக்கப்படும் பிராதில் உள்ள சொத்து விவரத்தில் வீடு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் கோழி பண்ணை இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது அப்பாவிற்கு விவசாயம்தான் தொழில் ஆகும். நான் கடைசியாக எனது அப்பா, அம்மா இருக்கும் வீட்டிற்கு என்போது சென்றேன் என்றால் அடிக்கடி சென்று வந்து கொண்டுதான் உள்ளேன். வழக்கு சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்களில் உள்ள கோழிப்பண்ணையை மாற்றிதான் வீடாக என் பெற்றோர் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கோழி பண்ணையில் இருந்து 200 அடி தள்ளி மற்றோரு ஓட்டு வீடு உள்ளது என்றாலும், அதில்தான் எனது அண்ணன் குடியிருந்து வருகிறார் என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

4) பிராதில் உள்ள சொத்து விவரங்களை எதை பார்த்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்து குறிப்பிட்டுள்ளேன். மேற்படி பாகப்பிரிவினையானது எனது அப்பாவிற்கும், எனது அண்ணனுக்கும் 1990–ம் ஆண்டு ஏற்பட்டதாகும். பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள விவரங்களைதான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை பத்திரம் இருக்கும் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஜுன் மாதம் 2022–ல் தெரியும், தேதி தெரியாது.

5) என்னிடம் காண்பிக்கப்படும் பிரமான வாக்குமூலத்தில், 19.07.2022 தேதியன்று வில்லங்கம் பார்த்தபோது பாகப்பிரிவினை பத்திரத்தை பற்றி தெரிந்து கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளனே் என்றால் சரிதான். வில்லங்கம் பார்த்த

பின்பு எத்தனை நாட்கள் கழித்து மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் நகலை பெற்றேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களின் நகல்களை 18.07.2022–ல் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் வில்லங்கம் பார்த்ததாக சொல்லும் 19.07.2022 தேதிக்கு முன்பே, மேற்படி ஆவணங்களை 18.07.2022 தேதியில் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களுக்கு உண்டான பட்டாக்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

6) வா.சா.ஆ.4 சிட்டாக்களை நான் தாக்கல் செய்துள்ளேன், அவற்றின் நிலங்களை பொறுத்து, 2ம் பிரதிவாதி பெயரில் தனியாகவும், கிணற்றை பொறுத்து, கூட்டாகவும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 04.07.2022 தேதியிலேயே எனது அண்ணன் பெயரில் உள்ள சிட்டா நகலை நான் பெற்றதாக கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெற்றோருக்கும், எனது அண்ணனுக்கும் சண்டை, சச்சரவு உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. 2022ம் ஆண்டு வில்லங்கம் பார்த்த பின்பு, எனது அப்பாவிற்கும், எனது அண்ணனுக்கும் எத்தனை ஏக்கர் பாகம் பிரிந்தது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

7) இந்த வழக்கில் எனது அப்பா தனியாக வழக்கறிஞரை வைத்து வழக்கை நடத்தி வருகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது பெற்றோர்களுக்கும், எனது அண்ணனுக்கும், எனக்கும் பிரச்சனை வந்து, ஊரில் பைசல் பேசினார்களா என்றால் இல்லை. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு, எனது தந்தையும், எனது சகோதரரும் பாகம் பிரித்துக்கொண்டது செல்லாது என்று எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் 1988–ம் ஆண்டு பிறந்தேன். எனக்கு 2010–ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. நான் இந்த வழக்கை 2022–ம்

ஆண்டு தாக்கல் செய்துள்ளேன். நான் 2022-ம் ஆண்டு பாகம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால், சட்டப்படி எனக்கு நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1990-ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையை பற்றி எனக்கு முன்பே தெரிந்துகொண்டு, காலம்கடந்து பின்னிட்டு 2022ம் ஆண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

8) எனது அண்ணனுடன் வழக்கு தாக்கல் செய்த பிறகு பேச்சுவார்த்தை இல்லை. நானும், எனது பெற்றோரும் ஒன்று சேர்ந்து, மற்றவர்களின் தூண்டுதலின் பேரில், எனது அண்ணனுக்கு தொந்தரவு செய்யவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களின் அனுபவம், எனது திருமணத்திற்கு பின்பு எந்த நேரத்திலும் எனது அனுபவத்தில் இல்லை என்றால் எனக்கும் சேர்ந்து எனது பெற்றோர் அனுபவம் செய்து வருகிறார். 1990-ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில், என் அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை, அவர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில்தான், எனது அண்ணன் பெயரில் பட்டா தனிப்பட்ட முறையில் உள்ளது என்றால் சரியல்ல. எனவே தாவாவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.02.18 17:15:24 +0530

Sub Judge,
Paramathy